முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 743**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.10.2021, திங்கட்கிழமை

1. ஆறுமுக என் சக்தியே அரங்கா
அறமாக வாழுகின்ற தேசிகா
மாறுதலை கலியில் செய்வேன் என்று
மகா அவதாரம் கேட்டு வந்த ஞான தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசி தந்து யானே உன் சக்தியாய்
அகிலத்தில் உலகமெங்கும் ஞானத்தை பரப்பி
3. பரப்பியே அரங்கன் நாமஜெபம்
பழுதில்லா எங்கெல்லாம் கேட்கின்றதோ
அறமாக்கி அங்கெல்லாம் ஆறுமுகன் யானே இரங்கி
அகிலத்தார்க்கு ஞானபலம்தந்து அருள்புரிகின்றேன்
4. அருளவே அரங்கனே உன் சீடர் மக்களே
அகிலத்தை மாற்றவல்ல ஞானிகளாக
வரம்பெற்று கலியுகத்தில் நிலை உயர்வர்
வல்லமைபட வையகத்தை மாற்றி மகிழ்வர்
5. மகிழ்வுதரும் மகா ஞானம் உன் ஞானம்
மகிமைதரும் மகா தர்மம் உன் தர்மம்
அகிலத்தில் எவர் உன் வழி ஏற்று
அரங்கா முருகா என கூறி வருகின்றாரோ
6. வருபவர்க்கு வையகத்தில் நல் வாய்ப்பு
வள்ளலாக வாழுகின்ற ஞானியாக
உண்டான மாற்றம் பெருமைபட அரங்கன் உன்னால் நடந்தேறும்
பிசகின்றி ஆறுமுகன் யான் இந்த அற்புதத்தை
7. அற்புதத்தை அரங்கன் உன் வழியே யானே நடத்தி அகிலம் வியக்க
இந்த உலகமெங்கும் ஞான ஆட்சி
மகிழவே மக்களை பாதுகாக்கின்ற
மகத்துவமிக்க ஞான சித்தர் காலமாக்கி அருள்புரிவேன்

8. அருளவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி நீ
அகிலத்தை வழிநடத்தி காக்கவந்த மாதவசி நீ
அகிலத்தார் உன்னை அறிந்து கொண்டால்
அன்றே இந்த உலகம் ஞான லோகமாகும்

9. ஆகுமப்பா அன்றுமுதல் ஞான சித்தர் ஆட்சிக்காலம்
அரங்கன் வருகையை வெளிப்படுத்தி இனிதே
யுகமக்களே உன் வழி வர
உயர்வான வாய்ப்பு தந்து அருள்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–